# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:11 | இஸ்லாம் | நேரம்:3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:................................................................................ | 16 | T | I |

**கவனிக்க:**

I. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

## பகுதி – I

**மிகச்சரியான விடையின் கீழ்க் கீறிடுக**

1. "அல் குத்ரத்" என்பதன் அர்த்தம் யாது?
   1) அல்லாஹ்வின் வல்லமை
   2) அல்லாஹ்வின் இருப்பு
   3) அல்லாஹ்வின் அருள்
   4) மறுமை வாழ்வு

2. இஸ்லாமிய அகீதாவின் தூய்மையைப் பாதுகாக்க போராடிய அறிஞர்.
   1) இமாம் ஷாபிஈ (ரஹ்)
   2) இமாம் மாலிக் (ரஹ்)
   3) இமாம் புஹாரி (ரஹ்)
   4) அபுல் ஹஸன் அல்-அஷ்அரி (ரஹ்)

3. இணைவைப்பாளர்களைக் குறிக்கும் சொல்
   1) மு.்.மின்
   2) முல்ஹித்
   3) முஷ்ரிக்
   4) காபிர்

4. அகீதாவில் புலன்களுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் தொடர்பாக விளக்கும் பகுதி
   1) அல்இலாஹிய்யாத்
   2) அந்நுபுவ்வாத்
   3) அர்ருஹானிய்யாத்
   4) அஸ்ஸம்இய்யாத்

5. "ரழா" எனும் பதத்தின் பொருள்
   1) கலப்பற்ற எண்ணம்
   2) பேணுதல்
   3) உலகப் பற்றின்மை
   4) பொருந்திக் கொள்ளல்

6. பின்வருவனவற்றுள் நெருக்கமான ஒத்தகருத்தைக் கொண்ட சோடி எது?
   1) ஸஹீஹ் - ழயீப்
   2) துன்யா - ஆகிறா
   3) முஜ்தஹித் - முகல்லித்
   4) கல்புன் சலீம் - கல்புன் முத்மஇன்னா

kalvi.lk

7. பின்வருவோரில் இரத்த உறவுக்குள் அடங்கும் மஹ்ரமி ஆனவர் யார்?
   1) உடன்பிறந்த சகோதரி
   2) மருமகள்
   3) மனைவியின் சகோதரி
   4) மனைவியின் மகள்

8. இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் தொடர்பான பிழையான கூற்று
   1) நிரந்தரமானவை
   2) அல்லாஹ்வால் வழங்கப்பட்டவை
   3) குறைகள் நிறைந்தவை
   4) நடைமுறைச் சாத்தியமானவை

9. ஸ்பெய்னை வெற்றி கொண்ட முஸ்லிம் தளபதி யார்?
   1) தாரிக் பின் ஸியாத்
   2) முஹம்மத் பின் காஸிம்
   3) ஹஜ்ஜாஜ் பின் யுசுப்
   4) முஹம்மத் அல் பாதிஹ்

10. அதிகமான மக்கள் அலட்சியமாக நடந்து கொள்ளும் இரு அருட்கொடைகள் என நபி(ஸல்)அவர்களால் கூறப்பட்ட விடயங்கள் முறையே
   1) தொழுகை – நோன்பு
   2) உணவு – குடிபானம்
   3) பார்த்தல் - செவியேற்றல்
   4) ஆரோக்கியம் - ஓய்வு

11. முஸ்லிம் சமுதாயத்தை அல் குர்ஆன் “உம்மதன் வஸதன்” என அழைக்கிறது. உம்மதன் வஸதன் என்ற பதம் எதனைக் குறிப்பிடுகின்றது?
   1) சிறந்த சமூகம்
   2) நடுநிலைச் சமூகம்
   3) இஸ்லாமிய சமூகம்
   4) மேற்கூறிய யாவும் சரி

12. முதன்மைப்படுத்தப்பட வேண்டியவை பற்றிய சட்டநோக்கு எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
   1) பிக்ஹுல் உஸ்ரா
   2) பிக்ஹுல் முஆமலாத்
   3) பிக்ஹுல் மஸாலிஹ்
   4) பிக்ஹுல் அவ்லவிய்யாத்

13. பின்வருனவற்றுள் அனுமதிக்கப்பட்ட வியாபார முறை
   1) கூட்டுப்பங்காண்மை
   2) வட்டி
   3) பதுக்கல் வியாபாரம்
   4) கலப்படம்

14. முஸ்லிம் சமூகத்தில் தோன்றிய முக்கிய சமூகவியல் அறிஞர் யார்?
   1) அலி இப்னு ஸீனா
   2) இப்னு கல்தூன்
   3) ரஷீத் ரிழா
   4) பாராபி

15. பெருந்தொடக்கை ஏற்படுத்தாத செயல்
   1) விந்து வெளிப்படல்
   2) ஹைல், நிபாஸ் ஏற்படல்
   3) முஸ்லிம் மரணித்தல்
   4) மதி வெளிப்படல்

16. அல் குர்ஆனில் உள்ளத்தின் மூன்று நிலைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் “நப்ஸுல் அம்மாரா பிஸ்ஸூ.” என்பது குறிப்பது
   1) இச்சைகளுக்கு எதிராக போராடும்மனம்
   2) இச்சைக்க அடிமைப்பட்ட மனம்
   3) திருப்தியடைந்த மனம்
   4) தீமையை ஏவும் மனம்

17. இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலில் தபால் திணைக்களத்தை உருவாக்கிய ஆட்சியாளர் யார்?
   1) கலீபா அபுபக்கர் (ரழி)
   2) கலீபா உமர் (ரழி)
   3) கலீபா உஸ்மான் (ரழி)
   4) கலீபா அலி(ரழி)

18. இஸ்லாத்தின் பார்வையில் ஊடகங்கள் பெற்றிருக்க வேண்டிய பண்பாடுகள் தொடர்பான மிகச் சரியான கூற்று
   1) ஆதாரபூர்வத்தன்மை
   2) நம்பகத்தன்மை
   3) நடுநிலை தவறாமை
   4) மேற்கூறிய யாவும் சரி

Education கல்வி

19. பின்வரும் "அ" நிரலை "ஆ" நிரலுடன் பொருத்தினால் வரும் மிகச் சரியான சேர்மானத் தொகுதியைத் தெரிவு செய்க

| அ | ஆ |
|---|---|
| 1) தர்தீபுத் தன்ஸீல் | A. ஓதிக்காண்பிக்கப்பட்ட ஒழுங்கு |
| 2) வஹி மத்லுவ் | B. இறக்கப்பட்ட ஒழுங்கு |
| 3) தர்தீபுத் திலாவத் | C. ஓதிக்காண்பிக்கப்படாத வஹி |
| 4) வஹி கைரு மத்லுவ் | D. ஓதிக்காண்பிக்கப்பட்ட வஹி |

i. BDAC
ii. CABD
iii. BDCA
iv. BCDA

20. அப்பாஸிய கலீபா ஒருவரினால் இலங்கை மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மார்க்கப் போதகர்

1) வஹ்ப் இப்னு அபீ ஹப்ஸா
2) ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரி
3) காலித் இப்னு பகாயா
4) ஒறாபி பாஷா

21. எகிப்திலிருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டவர்

1) உமர் ஹஸரத்
2) காலித் பின் பகாயா
3) இப்னு பதூதா
4) ஒறாபி பாஷா

22. உம்மஹாதுல் மு.்.மினீன்களில் வலை பின்னி ஜீவியம் நடாத்தியவர்

1) ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி)
2) ஸைனப் பின்த் குஸைமா (ரழி)
3) உம்மு ஹபீபா (ரழி)
4) ஸபிய்யா (ரழி)

23. குறித்த ஒரு பிரச்சினை தொடர்பில் முஸ்தஹித்களில் அதிகமானோர் ஒரு தீர்வில் ஒன்றுபடுவதைக் குறிப்பது யாது?

1) இஜ்மா ஸரீஹ்
2) இஜ்மா ஸுகூதி
3) இஜ்மா அக்ஸரிய்யா
4) இஜ்மா முரக்கப்

24. "குல்உ" பற்றி கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் சரியான கூற்று எது?

1) இது கணவன் மூலம் நிகழ்வதாகும்
2) இது மனைவியை தாய்க் ஒப்பாக்குவதாகும்
3) இது மனைவி மூலம் நிகழ்வதாகும்
4) இது முத்தலாக் மூலம் நிகழ்வதாகும்

25. உலகில் முதன்முதலில் தோன்றிய ஹதீஸ் தொகுப்பு

1) முஸ்னத் அஹ்மத்
2) முஸ்னத் ஷாபி
3) ஸஹீஹ் முஸ்லிம்
4) முவத்தா மாலிக்

26. மத்ரஸது ர.்.ய், மத்ரஸது அஸர் என்ற இரண்டு சிந்தனைப் போக்கையும் கொண்ட இமாம்

1) இமாம் ஷாபி (ரஹ்)
2) இமாம் மாலிக் (ரஹ்)
3) இமாம் அஹ்மத் (ரஹ்)
4) இமாம் அபு ஹனீபா (ரஹ்)

kalvi.lk

27. "அ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும் "ஆ பகுதியில் குறிப்பிடப்பட்ட விடயங்களையும் கருத்தில் கொள்க

"அ"

1) நஜ்ஜாஷி (அபீஸீனியா)
2) முகவ்கஸ் (எகிப்து)
3) கிஸ்ரா (பாரசீகம்)
4) ஹிராக்கல் (உரோமம்)

"ஆ"

A. ஹாதிப் இப்னு பல்தஆ (ரழி)
B. திஹ்யதுல் கல்பி (ரழி)
C. அம்ரு இப்னு அமையா (ரழி)
E. அப்துல்லாஹ் இப்னு ஹுதைபா (ரழி)

"அ" பகுதியில் மன்னர்களின் பெயர்களும் "ஆ" பகுதியில் அவர்களுக்கு கடிதங்களைக் கொண்டு சென்ற ஸஹாபாக்களின் பெயர்களும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. இவற்றை சரியாக ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடைத்தொகுதி யாது?

1. ADBC 2. BACD 3. CADB 4. DCBA

28. கர்ப்பிணித் தாயொருவரின் இத்தாக்காலம்
1) பிள்ளை கிடைக்கும் வரை
2) நான்கு மாதம் பத்து நாட்கள்
3) மூன்று மாதம்
4) இத்தா அவசியமில்லை

29. இஸ்லாத்தின் தூதை விரிவுபடுத்துவதற்காகவும் எதிரிகளின் சவால்களை முறியடிப்பதற்காகவும் முதன் முதலில் கடற்படையொன்றை நிறுவிய கலீபா
1) கலீபா அபுபக்ர் (ரழி)
2) கலீபா உமர் (ரழி)
3) கலீபா உஸ்மான் (ரழி)
4) கலீபா அலி (ரழி)

30. இலங்கையில் இஸ்லாத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தியதாகக் கருதப்படும் நபித்தோழர்
1) காலித் இப்னு பகாயா
2) தமீமுன் அன்சாரி
3) வஹப் இப்ன அபீ ஹப்ஸ்
4) உக்காசா

31. கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபராகவும் அரசியல் பிரமுகராகவும் இருந்து நாட்டுக்குப் பணியாற்றியவர்
1) சித்திலெப்பை
2) ரீ.பீ.ஜாயா
3) ஒறாபி பாஷா
4) ஐ.எல்.எம்.யு. அஸீஸ்

32. பின்வருவோருள் ஒரு பெண்ணிற்கு வலியாக வரமுடியாதோர் யார்?
1) தாயின் சகோதரன்
2) தந்தை
3) தந்தையின் தந்தை
4) உடன்பிறந்த சகோதரன்

33. இமாம் ஷாபிஈ அவர்களின் பிரதான ஆசிரியர்கள் இருவர்
1) இமாம் மாலிக், இமாம் அபுஹனீபா
2) இமாம் ராபிஃ, இமாம் கஸ்ஸாலி
3) இமாம் அஹ்மத், இமாம் நவவி
4) இமாம் மாலிக், இமாம் அபு யுசுப்

34. நபி முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு முதலாவது வஹி இறங்கிய இடம்
1) ஸபா
2) மர்வ
3) தவர்
4) ஹிரா

35. ஒருவன் தனது மனைவியை உடல்ரீதியாக தாயுடன் ஒப்பிடுவதால் ஏற்படும் விவாகரத்து.
1) லிஹார்
2) லிஆன்
3) பஸ்கு
4) ஈலாஉ

kalvi.lk

36. "அ" பகுதியிலுள்ள தகவல்களை "ஆ" பகுதியிலுள்ள தகவல்களோடு இணைத்தால், வரும் பொருத்தமான சேர்மானத் தொகுதியைத் தெரிவு செய்க

| "அ" | "ஆ" |
|---|---|
| 1) ஆதம் (அலை) | A. நெசவு |
| 2) நூஹ் (அலை) | B. இரும்புருக்கு |
| 3) இத்ரீஸ் (அலை) | C. தச்சு |
| 4) தாவுத் (அலை) | D. விவசாயம் |

i. DACB
ii. DCAB
iii. CDAB
iv. DCBA

37. ஸுன்னத்தான நோன்பு நோற்பதற்கு சந்தர்ப்பம் இல்லாத மாதம்
1) றமழான்
2) றஜப்
3) ஷவ்வால்
4) ஷ.ஃபான்

38. அம்மார் வியாபாரமொன்றை ஆரம்பித்து ஒரு வருட கால முடிவில் ரூ. 200000 கடனும் ரூ. 850000 ரூபா மிகுதியும் இருந்தது. அவ்வருடம் ஒரு பவுண் தங்கத்தின் விலை ரூ. 50000 ரூபாவாக இருந்தது. அம்மார் செலுத்த வேண்டிய ஸகாத்தின் அளவு
1) ரூ. 25000
2) ரு. 13750
3) ரூ. 16250
4) ரூ. 26250

39. நீரின் வகைகளுள் "அல்மாஉத் தஹூர்" எனப்படுவது
1) அதிகளவான நீர்
2) சுத்தமான நீர்
3) மிகச் சுத்தமான நீர்
4) உபயோகப்படுத்தப்பட்ட நீர்

40. அல்குர்ஆனை தொகுக்கும் முயற்சியில் கலீபாக்களான அபுபக்கர்(ரழி), உஸ்மான்(ரழி) ஆகிய இருவரது காலங்களிலும் பிரதான பங்கேற்ற ஸஹாபி
1) ஸைத் இப்னு தாபித்(ரழி)
2) ஹுதைபதுல் யமானி(ரழி)
3) ஸ.ஃத் இப்னு அபீ வக்காஸ்(ரழி)
4) பிலால் (ரழி)

(40 X 1 =40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

0817

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:11 | இஸ்லாம் | நேரம்:3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:.............................................................................. | 16 | T | II |

**கவனிக்க:**

I. முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

II. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

## பகுதி II

1. சுருக்கமான விடை தருக.
   1. நஜீஸின் இரண்டு பிரிவுகளைக் குறிப்பிடுக?
   2. இஸ்லாம் அனுமதித்த வர்த்தக முயற்சிகள் இரண்டைக் குறிப்பிடுக?
   3. ஹஜ், உம்ரா ஆகிய அமல்களில் பேணப்பட வேண்டிய பர்ளான விடயங்கள் இரண்டு தருக?
   4. அஸன்பே சரித்திரம் என்ற நாவலை எழுதியவர் யார்?
   5. பால்குடி உறவின் மூலம் மஹ்ரமாக்கப்பட்டுள்ள இருவரைக் குறிப்பிடுக?
   6. நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகையின் பின்னரும் ஓதிய சூராக்களில் இரண்டினைக் குறிப்பிடுக?
   7. அய்யாமுத் தஷ்ரீக் என்றால் என்ன?
   8. இமாம் ஷாபிஈ, இமாம் அபுஹனீபா ஆகியோரின் சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக?
   9. உம்மஹாதுல் மு.ஃமின்களுள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக?
   10. பர்ளு கிபாயாவிற்கு இரண்டு உதாரணங்கள் தருக?

(2x10=20 புள்ளிகள்)

2.
   1. இபாதத் என்பதன் கருத்தை விளக்குக?
   2. அகீதா ரீதியாக வழிகெட்ட பிரிவுகள் நான்கினைக் குறிப்பிடுக?
   3. நாளாந்த நடவடிக்கைகளை இபாதத்தாக மாற்றிக் கொள்வதற்கு அவசியமான நிபந்தனைகளை விளக்குக?

(2+3+5=10 புள்ளிகள்)

3.
   1. மு.ஃஜிஸாத் என்றால் என்ன?
   2. ரஸூல்மார்களுக்கு கிடைக்கப்பெற்ற அற்புதங்கள் மூன்றைக் குறிப்பிடுக?
   3. அல்குர்ஆன் குறிப்பிடும் ஐந்து அற்புதங்களை பட்டியலிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

kalvi.lk

4.

1. பிக்ஹுல் அவ்லவிய்யாத் உணர்த்தும் கருத்து யாது?
2. இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் கொண்டுள்ள தனித்துவப் பண்புகள் மூன்றினை எடுத்துக்காட்டுக?
3. அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தா தொகுப்பாசிரியர்களையும் அவர்களது தொகுப்பு நூல்களையும் குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

5.

1. விவாகரத்தில் "லிஹார்" "லிஆன்" என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக?
2. விவாக விலக்கின் மூன்று பிரிவுகளையும் குறிப்பிடுக?
3. இத்தாவின் மூலம் கிடைக்கும் நன்மைகளைக் குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

6.

1. வரையறைகளற்ற ஆண், பெண் தொடர்புகளினால் ஏற்படும் இரண்டு தீமைகளைக் குறிப்பிடுக?
2. ஒரு வாலிபன் தனது இளமைக் காலத்தைத் தீமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள பின்பற்ற வேண்டிய இஸ்லாம் கூறும் வழிமுறைகள் மூன்று குறிப்பிடுக?
3. உம்மத் எனும் கட்டமைப்பைப் பாதுகாக்க இஸ்லாம் காட்டியுள்ள வழிமுறைகள் ஐந்தைக் குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் ஏதாவது **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.

1. அபுபக்கர்(ரழி) கால அல் குர்ஆன் தொகுப்பு
2. நீரின் வகைகளும் அவற்றின் பயன்பாடும்
3. அர்கானுல் கியாஸ்
4. உலக வாழ்வு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

(5+5=10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page